**தலைப்பு 223 - இலங்கை கடற்படை**

**------------------------------------------------**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 223 - இலங்கை கடற்படையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை தொடர்பான கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்களும் உள்ளடக்கப்பட்ட கூற்றுக்களுக்குரிய குறிப்புகள் என்பவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 ஆகஸ்ட் 06 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இலங்கைக் கடற்படையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும்

வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பேணப்படுகின்றது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காண்தல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாக காட்டுவதன் காரணமாக இடம்பெறுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பின்வரும் பரிந்துரைகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

**(அ) மீண்டெழும் செலவுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | இலக்கம் 09/2022 கொண்ட 2022 திசெம்பர் 27 ஆம் திகதி இடப்பட்ட வரவு செலவு சுற்றறிக்கையின் 02 ஆவது பிரிவின் பிரகாரம் 2023 ஆம் ஆண்டுக்குரிய விரிவான வரவு செலவு மதிப்பீடுகளில் முன்னுரையில் வலியுறுத்தப்பட்டுள்ள வகையில் வருடாந்த வரவு செலவு மதிப்பீட்டின் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி எல்லையினை விஞ்சாத வகையில் செலவினை முகாமைத்துவப்படுத்துதல் | நிதி மதிப்பீடுகளை முடிந்த வரையில் சரியான முறையில் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடி காரணமாக கடற்படையினால் மதிப்பீடு செய்யப்பட்டு கோரப்பட்டிருந்த முழு ஒதுக்கீட்டு தொகையும் கடற்படைக்குக் கிடைக்கவில்லை. | பற்றுக்களை ஏற்படுத்தும் போது ஒதுக்கீட்டு எல்லையினை விஞ்சாத வகையில் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள், கணக்கீட்டு உத்தியோகத்தர்களைப் போன்றே விடயப் பொறுப்பு உத்தியோகத்தர்களின் கடமையாக உள்ள போதிலும், மீளாய்வாண்டில் 21 செலவு விடயங்களில் தேறிய ஒதுக்கீடு ரூபா. 31,975,880,000 ஆன போதிலும் அவற்றின் முழு செலவையும் விஞ்சி ரூபா. 9,671,616,659 ஆன தொகையினை கொண்ட பற்றுக்கள் மீளாய்வாண்டில் ஏற்பட்டிருந்தது. | கடற்படையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள கடமை தன்மைகளின் அடிப்படையில் செயற்பாடு மற்றும் நிர்வாகக் கடமைகளைத் தொடர்ச்சியாக மற்றும் முறையாகப் பேணிச் செல்லுதல் தேசிய பாதுகாப்பிற்கு மிகவும் அத்தியாவசியமான காரணி என்பதனால் அதற்கு எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தினை விட அதிகமாகச் செலவிடுவதற்கு நேரிட்டமையால் ஒரு சில விடயங்களில் அங்கீகரிக்கப்பட்ட நிதி எல்லையினை விஞ்சி பிணைகளை ஏற்படுத்துவதற்கு நேரிட்டுள்ளது. அவ்வாறு ஒதுக்கீட்டு எல்லையினை விஞ்சி பிணை ஏற்படுத்துவதற்கு அவசியமான சந்தர்ப்பங்களில் நிதிப் பிரமாணம் 94(2) மற்றும் 94(3) மூலம் ஏற்படுத்தப்பட்டிருந்த ஒதுக்கீட்டிற்கு அமைய செயல்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது தயவுடன் தெரிவிக்கப்படுகின்றது. | |
| (ii) | கடற்படையில் 05 மீண்டெழும் செலவு விடயங்களினது மற்றும் 13 மூலதன செலவு விடயங்களினது மொத்தம் ரூபா. 5,294.900,000 ஆன நிதி ஒதுக்கீடு இலங்கை இராணுவத்திற்கு மாற்றப்பட்டிருந்ததனால் மீளாய்வாண்டிற்கு உரிய அந்த செலவு விடயங்களில் பொறுப்புக்கள் ரூபா. 9,264,105,756 இனால் அதிகமாக இருந்தது. | 2023 நவம்பர் மாதம் 28 ஆம் திகதி எடுக்கப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்திற்கு அமைய கடற்படையின் ஒதுக்கீடுகளில் ரூபா.5.29 பில்லியன் ஒதுக்கீட்டினை எதிர்பாரா வகையில் இராணுவத்திற்கு மாற்ற நேரிட்டிருந்தது. அதுவரையில் தருவித்தற் கட்டளை வழங்கப்பட்டிருந்த உள்நாட்டு வெளிநாட்டு விநியோகத்தர்கள் மற்றும் ஒப்பந்தங்கள் ஏற்படுத்தப்பட்டிருந்த விடயங்கள் கடற்படைக்கு அந்த வருடத்திலே வழங்கப்பட்ட காரணத்தால் அதற்குரிய விலைப் பட்டியல்களைத் தீர்ப்பதற்கு | பொறுப்புக்கள் ஏற்படுத்தப்படும் போது ஒதுக்கீட்டு எல்லையினை விஞ்சாத வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

அந்த விடயங்களின் ஒதுக்கீட்டு எல்லை போதுமானதாக இல்லாமை பொறுப்புக்கள் அதிகரித்ததற்கும் மற்றும் செலவினை முகாமத்துவப்படுத்துவதற்கு முடியாதிருந்ததற்கும் காரணமாகும்.

### (ஆ) மூலதன செலவுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை கடற்படையின் மூலதன செலவு விடயங்களின் கீழான பொறிகள் மற்றும் இயந்திர உபகரண சொத்துக்களைக் கையகப்படுத்துவதற்கு இருந்த ரூபா.152,890,000 உம் மற்றும் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்வதற்கு இருந்த ரூபா. 190,027,000 உம் இலங்கை இராணுவத்திற்கு மாற்றப்பட்ட காரணத்தால் கடற்படையின் மூலதன சொத்து அபிவிருத்திக்கு இடையூறு ஏற்படுவதனால் எதிர்கால செயல்பாடுகளின் வினைத்திறன் மற்றும் உற்பத்தித்திறன் பலவீனமடைவதற்கு காரணமாகக் கூடும் என்பது அவதானிக்கப்பட்டது. | இலங்கை கடற்படையின் மூலதன செலவு விடயங்களின் கீழ் ஒதுக்கப்பட்டிருந்த நிதி இராணுவத்தின் உணவு பானங்கள் மற்றும் சீருடை செலவிற்கு மாற்றப்பட்ட காரணத்தால் கடற்படையின் மூலதன சொத்து அபிவிருத்தியில் இடையூறு ஏற்படுவதற்கு காரணமாக இருக்கக் கூடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ள விடயம் தொடர்பில் இணங்குகின்ற போதிலும், 2023 நவம்பர் மாதம் 28 ஆம் திகதி எடுக்கப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்திற்கு அமைய பாதுகாப்பு அமைச்சின் கீழ் காணப்படும் செலவு அலகின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட மீதிகள் சேமித்து வைக்கப்பட்டிருந்தன. அதன் கீழ் கடற்படைக்கு ஒதுக்கப்பட்டிருந்த நிதியின் மூலம் ரூபா 5.29 பில்லியன் அளவிலான நிதியினை சேமித்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | மூலதன சொத்துக்களின் அபிவிருத்தியில் எதிர்காலத்தில் அதிக கவனம் செலுத்தப்படுதல் வேண்டும். |

**(இ) அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2023 திசெம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான முற்பண பி கணக்கில் ஒற்றை மீதி வகைப்படுத்தல் பொழிப்பிற்கு அமைய 266 பேரிடமிருந்து 2001 ஆம் ஆண்டு தொடக்கம் அறவிடப்பட வேண்டிய ரூபா. 15,671,072 ஆண்டு இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. அறவிடுதல் தொடர்பில் போதிய அளவு கோவைகள் காணப்படுகின்றன என்பது உறுதிப்படுத்தப்பட்டிருந்த ரூபா. 25,000 இற்கு அதிகமான மீதி காணப்படும் 230 கடற்படை வீரர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா. 13,754,080 ஐ நீக்குவதற்கு அரச நிதித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. மீதி 36 கடற்படை வீரர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா. 1,916,992 தொடர்பில் அறவிடப்படுதல் குறித்த தகவல்களை உரிய பிரதேச செயலகம் மற்றும் ஓய்வூதியத் திணைக்களத்தின் மூலம் உறுதிப்படுத்திக் கொள்ளுவதற்கு முடியாதிருந்தது. | இலங்கை கடற்படையின் முற்பண பி கணக்கில் 2001 ஆம் ஆண்டு தொடக்கம் அறவிடப்பட வேண்டிய ரூபா. 15,671,072 கடன் மீதியில் ரூபா. 25,000 இற்கு அதிகமான மீதிகள் காணப்படும் 230 நபர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா. 13,754,080 ஆன மீதியினை நீக்குவதற்கு அரச நிதி திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. எஞ்சிய ரூபா. 1,916,992.00 மீதியினை அறவிடுவதற்கு மேலும் கோவைகளைத் தேடி உறுதிப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது என்பதைத் தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | நிலுவை முற்பண மீதிகளை அறவிடுவதற்கு போதுமானளவு நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ii) | அரச உத்தியோகத்தர்களின் முற்பண பி கணக்கில் திணைக்களக் கட்டுப்பாட்டு கணக்கின் மீதி ரூபா. 523,138,367 ஆக இருந்த போதிலும், ஒற்றை மீதி வகைப்படுத்தல் பொழிப்பிற்கு அமைய மீதி ரூபா. 501,512,741 ஆக இருந்ததால் மீளாய்வாண்டின் இறுதித் தினத்தில் அந்த மீதிகளிடையே ரூபா. 21,625,626 வித்தியாசம் காணப்பட்டது. 2001 ஆம் ஆண்டு தொடக்கம் தொடர்ந்து வரும் இந்த வித்தியாசம் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சின் மூலம் நியமிக்கப்பட்டிருந்த குழுவின் அறிக்கைக்கு அமைய இந்த வித்தியாசத்தினை பரீட்சிப்பு செய்வதற்கு புத்தகங்கள் மற்றும் கணக்கு பொழிப்புகள் கடற்படையிடம் இல்லை என்பதால் திறைசேரியின் | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் அந்த மீதிகளிடையே காணப்பட்ட ரூபா. 21,625,626 ஆன வித்தியாசம் மற்றும் ரூபா. 18,251,726.34 ஆன நீண்ட காலமாக அறவிடப்படாதுள்ள வேறு கடன் என காட்டப்பட்டுள்ள மீதி தொடர்பில் நியமிக்கப்பட்ட விசாரணை சபையின் பரிந்துரையின் பிரகாரம் மேலே கூறப்பட்ட முரண்பாடுகளை நீக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதால் முதலாவதாக ரூபா. 18,251,726.34 ஆன அறவிடப்படாது காணப்படும் மீதியில் ரூபா. 16,848,699.61 இற்கு உரிய நீக்குதலுக்கு | வித்தியாசத்தினை இனம் கண்டு சரி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அரச நிதித் திணைக்களத்துடன் இணைந்து பொருத்தமான நடவடிக்கை எடுப்பதற்கு மற்றும் கடற்படை சட்டப் பிரிவின் தலையீட்டில் மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் பொருத்தமானது எனப் பரிந்துரை செய்யப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் கடன் மற்றும் முற்பணக் கட்டுப்பாட்டு கணக்கு வித்தியாசம் அதேபோன்று காணப்பட்டது. | தேவையான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அதில் ரூபா. 2,509,087.87 ஆன கடன் மீதி பாதுகாப்பு அமைச்சின் அனுமதியின் அடிப்படையில் நீக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | |
| (iii) | தனிப்பட்ட மீதி வகைப்படுத்தல் பொழிப்பிற்கு அமைய ஒரு வருடத்திற்கும் பத்து வருடத்திற்கும் இடைப்பட்ட காலம் தொடக்கம் சேவையினைக் கைவிட்டுச் சென்ற 36 ஊழியர்களிடமிருந்து ரூபா. 4,121,081 உம், ஓய்வு பெற்றுச் சென்ற 07 ஊழியர்களிடமிருந்து ரூபா. 896,373 உம், வேலை நீக்கம் செய்யப்பட்ட ஊழியர்களிடமிருந்து ரூபா. 234,994 உம், மரணமடைந்த ஊழியர்கள் நான்கு பேரிடம் இருந்து ரூபா. 531,409 உம் எனும் ரீதியில் 48 ஊழியர்களிடமிருந்து ரூபா. 5,783,857 மீளாய்வாண்டு இறுதி வரையில் அறவிடப்பட்டிருக்கவில்லை. | ஒற்றை மீதி வகைப்படுத்தல் பொழிப்பிற்கு அமைய ஒரு வருடத்தினை விஞ்சி உள்ள அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகள் தொடர்பில் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள மற்றும் எதிர்காலத்தில் மேற்கொள்ளுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ள நடைமுறைகளாக பிணையாளர்களிடமிருந்து அறவிட்டுக் கொள்ளுதல், சட்டப் பிரிவிடம் அனுப்புதல், தவணை ரீதியில் அறவிடுவதற்கு இணக்கப்பாட்டினைப் பெற்றுக் கொள்ளுதல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | நிலுவை கடன் மீதிகளை அறவிடுவதற்கு விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

### (ஈ) ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

ஆதனம், பொறி மற்றும் உபகரணம் கணக்கீடு செய்யும் போது கீழே குறிப்பிடப்பட்டுள்ள குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கடற்படைக்குச் சொந்தமான 28 நாய்களின் ரூபா. 2,537,000 பெறுமதி நிதி அல்லாத சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நாய்களைக் கொள்வனவு செய்வதற்காக செலவு விடயம் 2103 இனால் மேற்கொள்ளப்பட்ட செலவு பின்னர் நிகழ்நிலை சிகாஸ் ஒழுங்கமைப்பின் மூலம் சரியான செலவு விடயத்திற்கு மாற்றப்பட்டுள்ளது என்பது தயவுடன் | சரியான செலவு விடயத்தின் கீழ் கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

தெரிவிக்கப்படுகின்றது.
மேலும், பொலிசுக்கு விலங்குகளைக் கொள்வனவு செய்வதற்காக செலவு விடயம் 2509-13 இன் கீழ் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்பது அவதானிக்கப்படுகின்றது.
எதிர்காலத்தில் கடற்படைக்கு நாய்களைக் கொள்வனவு செய்வதற்குத் தேவையான நிதி வருடாந்த பாதீட்டு மதிப்பீடு தயாரிக்கப்படும் சந்தர்ப்பத்தில் சரியான செலவு விடயத்தில் ஒதுக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது தயவுடன் தெரிவிக்கப்படுகிறது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

மாதிரிக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்பட்டுள்ளன.

| **அவதானிப்புக்கள்** | | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமை** | | |
| (அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் | | | |
| (i) 3 மற்றறும் 6 ஆவது பிரிவு | ஒன்றிணைந்த நிதியத்திற்குக் கிடைக்கும் அனைத்து வருமானங்கள், ஒன்றிணைந்த நிதியத்தினால் மேற்கொள்ளப்படும் அனைத்து செலவுகள் மற்றும் கணக்குகள் பரீட்சிப்பு செய்யப்பட வேண்டிய போதிலும், கடற்படையின் | நலனோம்பல் செயல் திட்டங்கள் அரச சார்பற்ற நிதியத்தின் மூலம் ஆரம்ப மூலதனத்தினைப் பெற்றுக் கொண்டு நிறுவப்பட்டு கடற்படை சேவையில் ஈடுபட்டுள்ள கடற்படை வீரர்கள், ஓய்வு பெற்ற கடற்படை வீரர்கள், | அனைத்து நிதிய செயற்திட்டங்களுக்கும் உரிய வருமானம், செலவு மற்றும் கணக்கு அறிக்கை என்பன |

| | | | |
|---|---|---|---|
| | திசைகாட்டி வழிநடத்தல் சேவைகள், மாலிமா எண்டர்பிரைசஸ், எரிபொருள் நிரப்பு நிலையங்கள், விவசாய செயற்திட்டங்கள், திமிங்கிலம் பார்வையிடல் செயற்திட்டம், ஓய்வு விடுதிகள் என்பவற்றின் நிதியத்திற்கு உரிய வருமானம், செலவு தொடர்பான கணக்கு அறிக்கைகள் மற்றும் பதிவேடுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | யுத்தத்தின் போது மரணமடைந்த, ஊனமுற்ற மற்றும் காணாமல் போன கடற்படை வீரர்களின் மற்றும் அவர்களது நெருங்கிய உறவினர்களது நலனோம்பலை நோக்காகக் கொண்டு பேணப்பட்டு வருவதுடன், முழுமையாக இலாபம் ஈட்டும் நோக்கம் அல்லாத நலனோம்பல் செயல் திட்டம் ஆகும்.<br><br>முப்படை, பாதுகாப்பு அமைச்சு மற்றும் பொதுத் திறைசேரியுடன் இது தொடர்பில் கலந்துரையாடல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், அதன் இறுதித் தீர்மானம் இதுவரையில் எட்டப்படவில்லை என்பதனால் எதிர்காலத்தில் பாதுகாப்பு அமைச்சன் மூலம் வழங்கப்படும் அறிவுரைக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| (ii) 6 (3) ஆவது பிரிவு | நிதி விடயம் ஒப்படைக்கப்பட்டுள்ள அமைச்சரின் இணக்கப்பாட்டுடன் மற்றும் கணக்காய்வு தலைமை அதிபதியிடம் விசாரித்து நிறுவனங்களின் கணக்குகளைக் கணக்காய்வு செய்யும் நோக்கில் தகைமை வாய்ந்த கணக்காய்வாளர் நியமிக்கப்பட வேண்டிய போதிலும், கடற்படையின் நிதியத்தின் கணக்காய்விற்காக நியமிக்கப்பட்டிருந்த கணக்காய்வாளர் அந்த ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | 2016 ஆம் ஆண்டு இடம்பெற்ற அரச கணக்கீட்டு செயற்குழுவின் கட்டளை இலக்கம் 09 இற்கு பதிலளிக்கும் வகையில் கடற்படையினுள் காணப்படும் அரச சார்பற்ற சொத்துக்களைக் கணக்காய்வு செய்வதற்கு ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வு நிறுவனத்திடம் தற்போது கணக்குகள் வழங்கப்பட்டு வருவதுடன் எதிர்வரும் நிதி ஆண்டிற்கு கணக்காய்வாளரை நியமிக்கும் போது 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் 6(3) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் தெரிவிப்பதற்கு | அதிகார சட்டத்தின் ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | நடவடிக்கை எடுக்கப்படும் என்பது தயவுடன் தெரிவிக்கப்படுகின்றது. | |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) நிதிப் பிரமாணம் 101 ஆவது பிரிவு | 2010 ஜூலை மாதம் 21 ஆம் திகதி தொடக்கம் 2011 ஓகஸ்ட் மாதம் 21 ஆம் திகதி வரையான காலப் பகுதியினுள் இலங்கை ‘‘பரகும்பா’’ நிறுவனத்தில் இருந்து உணவு களஞ்சிய சாலைக்கு விநியோகத்தர்களினால் உணவு விநியோகிக்கும் போது மற்றும் உணவு களஞ்சிய சாலையில் இருந்து சமையலறைக்கு உணவு வழங்கும் போது ஏற்பட்டிருந்த ரூபா. 7,721,406 ஆன நட்டம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணை சபை அறிக்கைக்கு அமைய 11 குற்றவாளிகள் 2015 ஆம் ஆண்டில் அடையாளம் காணப்பட்டிருந்தனர். அதில் 04 பேருக்கு குறித்த நட்டம் கடற்படை வீரர்களின் நல்லெண்ண பரிசு நிதியத்தில் இருந்து அறவிடப்பட்டிருந்த போதிலும், மிகுதி 07 கடற்படை வீரர்களுக்கு உரிய நட்டத்தினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த நட்டத்துடன் தொடர்புடைய கடற்படை வீரர்கள் இருவர் கடற்படை சேவையில் உள்ளதுடன் இன்னும் ஒருவரின் சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளது. மேலும் இந்த சம்பவத்துடன் தொடர்புடைய மீதி கடற்படை வீரர்கள் மூவர் 22 வருடங்கள் பூர்த்தி அடைவதற்கு முன்னர் கடற்படையிலிருந்து விலகி உள்ளதுடன் ஒருவர் 22 வருட சேவை காலம் பூர்த்தி அடைந்ததன் பின்னர் ஓய்வு பெற்றுச் சென்றுள்ளார். மேலும் அவர்களது சேவைப் பணிக்கொடையின் மூலமும் அறவீடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில் லை என்பது தெரிய வருகின்றது. ஓய்வூதியத்திற்கு உரித்துடைய நபரின் ஓய்வூதியத்தினை இடைநிறுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>இந்த நபர்களிடமிருந்து அறவிடுதல் தொடர்பில் சிவில் நீதிமன்றத்தில் வழக்கு தொடுப்பதற்கு கடற்படையின் சட்டப் பிரிவின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் மூலம் மூதூர் நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று | இந்த நட்டத்தினை அறவிடுவதற்கு ப் போதியளவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்ப டுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | தொடுக்கப்பட்டு அது தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | |
| (ii) நிதிப் பிரமாணம் 104 ஆவது பிரிவு | நட்டம் அல்லது நட்ட சேதம் ஒன்று ஏற்பட்டவுடன் விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், வெளிநாட்டுக் கொள்வனவுப் பிரிவில் கொள்வனவுகளின் போது பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT) விலக்களிக்கப்பட்ட பொருட்களுக்கு விநியோகத்தர்களுக்கு பெறுமதி சேர்க்கப்பட்ட வரியாக ரூபா. 2,329,345 செலுத்தப்பட்டிருந்தமை தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணை நடவடிக்கை நிறைவு செய்யப்பட்டு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2023 நவம்பர் மாதம் 23 ஆம் திகதி கடற்படை விசாரணை சபை நியமிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் நட்டம் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள பரிந்துரைக்கு அமைய பொறுப்புக் கூற வேண்டிய நபர்கள் யார் எனப் பெயரிடப்பட்டிருக்கவில்லை என்பதனால் மற்றும் உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விடயங்களைக் கவனத்தில் கொண்டு விசாரணை சபை அறிக்கை மீண்டும் தயாரிக்கப்பட வேண்டும் என்பது தெரிய வருகின்றது என்பதனால் விசாரணை சபை அறிக்கையை மீண்டும் தயாரிப்பதற்கு விசாரணைக் குழுவிடம் மீண்டும் அனுப்பப்பட்டுள்ளது. | விசாரணையை விரைவில் நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (iii) நிதிப் பிரமாணம் 177 (1) ஆவது பிரிவு | சேகரிக்கப்படும் அரச நிதி திறைசேரிக்கு மாற்றப்பட வேண்டிய போதிலும், கடற்படை உத்தியோகத்தர்களின் மற்றும் கடற்படை வீரர்களின் நலனோம்பல் நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள 04 சொகுசு பேருந்துகளில் இருந்து மற்றும் 02 வான்களில் இருந்து கடற்படையானது 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் ஈட்டியிருந்த ரூபா. 19,880,407 ஆன வருமானம் கடற்படையின் நலனோம்பல் நிதியத்தில் செலவு வைக்கப்பட்டிருந்தது. அந்த | சேவையில் ஈடுபட்டுள்ள, ஓய்வு பெற்ற, யுத்தத்தில் மரணமடைந்த மற்றும் ஊனமடைந்த கடற்படை வீரர்கள் மற்றும் அவர்களது நெருங்கிய உறவினர்களின் நலனோம்பல் நோக்கில் நிவாரண விலையின் கீழ் நலனோம்பல் நடவடிக்கைகளுக்காக கடற்படை தலைமை அதிபதியின் பத்திரத்தின் மூலம் முறையான ஒழுங்கு விதிகளுக்கு அமைய அனுமதியினைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் அந்த பேருந்து மற்றும் வேன் என்பவற்றை வழங்குதல் மேற்கொள்ளப்படுகின்றது. | ஒன்றிணைந்த நிதியத்திற்குரிய வருமானத்தினைச் சேகரிப்பதற்கு தாமதமின்றி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | காலப் பகுதிக்கு உரிய எரிபொருளுக்காக ரூபா. 17,113,256 உம் , திருத்த வேலைகளுக்கான செலவாக ரூபா. 4,486,420 உம் என ரூபா. 21,599,676 ஆன தொகை அந்த வாகனங்களுக்காக கடற் படையினால் செலவிடப்பட்டிருந்தது. | அதிலிருந்து அறவிடப்படும் நிதி அந்த வாகனங்களைச் செலுத்தும் போது ஏற்படும் திருத்த வேலைகளை மேற்கொள்வதற்கு பயன்படுத்தப்படுகின்றது. முப்படை, பாதுகாப்பு அமைச்சு மற்றும் திறைசேரியுடன் இது தொடர்பில் கலந்துரையாடல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், அதன் இறுதி தீர்மானம் இதுவரையில் எட்டப்படவில்லை என்பதனால், எதிர்காலத்தில் பாதுகாப்பு அமைச்சின் மூலம் வழங்கப்படும் அறிவுரைகளுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | |
| (இ) | அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் 7.9.6 (அ) ஆவது பிரிவு | இலங்கையில் உள்ள உழைப்பு, மூலப் பொருட்கள் மற்றும் ஆக்கக்கூறுகள் வழங்கப்படுகின்ற உற்பத்தியின் (Ex work) விலையில் 30 சதவீதம் வரையில் அல்லது ஆக குறைந்தது விலைமனு சமர்ப்பிக்கப்படும் சந்தர்ப்பம் தொடக்கம் அந்த பொருட்கள் உற்பத்தி செய்தல் / சேகரித்தல் நடவடிக்கைகளில் ஈடுபடும் வரையில் உள்நாட்டு முன்னுரிமை அடிப்படையில் 20 சதவீத விளிம்பு மட்டத்தினை வழங்க வேண்டிய போதிலும், அதற்கு முரணாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்ததன் அடிப்படையில் 3000 பாதுகாப்பு காலணி சோடிகளைக் கொள்வனவு செய்யும் போது ரூபா. 2,236,500 கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தது. அதே போன்று மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டிருந்த | குறித்த சம்பவம் தொடர்பில் விசாரணை சபை ஒன்றை நியமிப்பதற்காக பாதுகாப்பு அமைச்சின் பிரதிநிதி ஒருவரை நியமிப்பதற்கு கணக்காளரிடம் (வருமானம் மற்றும் சொத்து முகாமைத்துவம்) 2024 மே மாதம் 01 ஆம் திகதி கடற்படை தலைமை அதிபதியின் கடிதத்தின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதற்கு அமைய, குறித்த விசாரணைக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பது மேலும் தெரிவிக்கப்படுகின்றது. | பெறுகை வழிகாட்டலின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படுதல் மற்றும் முரண்படுதல் தொடர்பில் முறையான விசாரணை மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | காலணிகளுள் இந்த காலணிகள் எடையில் அதிகமானவை என்பதும் தரத்தில் திருப்தியற்றதாக இருந்தது என்பதும் அவதானிக்கப்பட்டது. | | |
| (ஈ) | இலக்கம் 07/2017 கொண்ட 2017 திசெம்பர் 21 ஆம் திகதியிடப்பட்ட திறைசேரி பிரதி செயலாளரின் சொத்துக்கள் முகாமைத்துவச் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி | அரசுடன் இணைந்த நிறுவனத்தில் இருந்து 03 மோட்டார் சைக்கிள்களும், 50 கைப்பற்றப்பட்ட வாகனங்களும் எனும் ரீதியில் பதிவு செய்தல் உரிமையற்ற வாகனங்கள் மற்றும் 53 மோட்டார் சைக்கிள்கள் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சுக்கு விடயங்கள் அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பான நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு இருக்கவில்லை. அந்த வாகனங்களில் பெரும்பாலான வாகனங்கள் பயன்படுத்தப்பட முடியாத நிலைமையில் காணப்படுகின்றன என்பதும் அவதானிக்கப்பட்டது. | இந்த வாகனங்கள் கடற்படையினால் கைப்பற்றப்பட்டு 14 வருட காலம் கடந்திருந்ததுடன், பெரும்பாலான வாகனங்களுக்குத் திருத்த வேலைகள் செய்ய நேரிட்டுள்ளது. அந்த திருத்த வேலைகளை மேற்கொள்ளுதல் பொருளாதார ரீதியில் உற்பத்திதிறனானது அல்ல என்பதனால் யுத்த காலத்தில் கைப்பற்றப்பட்ட மீதி 50 வாகனங்களும் முன்னயவை போன்றே சேதமடைந்த பொருட்களாகக் கொள்ளுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பிரேரணை செய்யப்பட்டுள்ளது. மேலதிக நடவடிக்கை மேற்கொள்வதற்காகப் பாதுகாப்பு அமைச்சின் மூலம் இதற்குப் பொருத்தமான பரிந்துரை வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. | உரிமையற்ற மற்றும் பயன்படுத்தப்பட முடியாத வாகனங்கள் தொடர்பில் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை கடற்படைக்கு சொந்தமான 271 கப்பல்கள், படகுகள், கலங்கள் என்பவற்றில் 06 கடலோர கண்காணிப்புக் கப்பல்களும், 03 விரைவு தாக்குதல் கப்பல்களும், 31 கடலோரப் பாதுகாப்பு விரைவு | இந்த கலங்களுடையே ஒரு பகுதி பழுது பார்க்கப்பட்டு வருவதுடன் இன்னுமொரு கலங்களின் பகுதிக்கு உதிரிப் பாகங்களுக்கான கட்டளை அனுப்பப்பட்டுள்ள போதிலும் | நிதி ஒதுக்கீடுகளை எதிர்பார்க்கப்பட்ட பணிகளுக்காக அதிகபட்ச வினைத்திறனுடன் பயன்படுத்தப்படுதல் |

| | |
|---|---|
| தாக்குதல் கலங்களும், 11 விரைவு தாக்குதல் ரோந்து கலங்களும், 08 கடலோரக் கண்காணிப்பு ரோந்து கலங்களும், 04 பயணிகள் மற்றும் பொருட்கள் போக்குவரத்து கலங்களுமாக 63 கப்பல்களும் கலங்களும் மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் செயல்பாடின்றி காணப்பட்டது. 2019 ஆம் ஆண்டு தொடக்கம் 2023 ஆம் ஆண்டு வரையில் கப்பல்கள், படகுகள், கலங்கள் என்பவற்றின் திருத்த வேலைகளுக்காக ரூபா. 38,146,514,747 மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், ரூபா. 17,850,651,000 நிதி மட்டுமே கிடைத்திருந்தமையும், கிடைத்த நிதியிலிருந்து ரூபா. 12,736,971,040 மட்டுமே பயன்படுத்தப்பட்டிருந்தமையும் இதில் பிரதான ரீதியில் தாக்கத்தை ஏற்படுத்தி இருந்தது. | இன்னும் உதிரிப் பாகங்கள் கிடைத்திருக்கவில்லை. |
| | வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கடற்படையில் Material digital camaflag , Material olive green, Black drill மற்றும் Material cloth truser inner ஆகிய துணி வகைகளில் 57,014 மீட்டர் துணி 2019 ஆம் ஆண்டு இறுதி வரையில் களஞ்சியசாலையில் இருந்த போதில் மற்றும் வருடாந்த இருப்புத் தேவைப்பாடு தொடர்பான மதிப்பீடு இன்றி 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் 164,520 மீட்டர் துணி கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. 2020 ஆம் ஆண்டு தொடக்கம் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலான 04 வருட காலத்தினுள் அந்தத் துணி வகைகளில் 96,175 மீட்டர் துணி மட்டுமே விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் , அதற்கமைய 2019 ஆம் ஆண்டு | 2024 ஆம் ஆண்டில் சுமார் 4,169 கடற்படை வீரர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது எனக் கடற்படை பணிப்பாளரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், 383 பேர் மட்டுமே ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்ததுடன், இந்த வருடத்தினுள் மீதி தொகையினை ஆட்சேர்ப்பு செய்யப்படாவிட்டால் கட்டளை இடப்பட்டுள்ள சீருடை அளவானது விநியோகிக்கப்படாது காணப்படக்கூடும். | அரச நிதி அத்தியாவசியமான பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக மட்டும் சிக்கனமாகப் பயன்படுத்தப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொடக்கம் நிலவி வரும் இருப்புகளையும் உள்ளடக்கியதான 125,359 மீட்டர் அளவிலான இருப்பு மீளாய்வாண்டு இறுதியில் களஞ்சிய சாலையில் காணப்பட்டதுடன் அந்த துணிகளின் தரம் குறைவடைந்து இருந்தது என்பதும் அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | Material Woollen Polyester dark blue 6 (A), Material woolen polyester reefer suit மற்றும் Material wooden mess Jacket துணி 18,145 மீட்டர்கள் ரூபா. 24,949,100 பெறுமதிக்கு 2012 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் 2012 ஆம் ஆண்டு தொடக்கம் 2023 ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதியினுள் அந்த உருப்படிகளில் 12,378 மீட்டர் துணி மட்டுமே விநியோகிக்கப்பட்டிருந்ததனால் மீளாய்வாண்டின் இறுதியில் 5,767 மீட்டர் துணி களஞ்சிய சாலையில் காணப்பட்டது. பாரியளவிலான தொகையினைக் கொள்வனவு செய்ததன் பின்னர் 2014 ஆம் ஆண்டு தொடக்கம் அந்தத் துணிகளில் சீருடை தைப்பதை நிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்ட காரணத்தால் 11 வருடங்களுக்கும் அதிகமான காலம் தொட்டு துணியானது களஞ்சிய சாலையில் குவிந்துள்ளதுடன் அவற்றின் தரமும் குறைவடைந்திருந்தது. | துணிக் களஞ்சியசாலையினுள் தற்போது Material Woolen Polyester Dark Blue 6(A) 2,997.30 மீட்டர் துணியும், Material Woolen Polyester Reefer Suit 1,750.85 மீட்டர் துணியும், மற்றும் Material Woolen Mess Jacket 1,019,00 மீட்டர் துணியுமான இருப்பு காணப்படுகின்றது. இந்தத் துணிகள் 2012 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் , 2014 திசெம்பர் 10 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் WAS/01/2024 கொண்ட பணிப்பாளர் அறிக்கையின் மூலம் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதன் பிரகாரம், இந்த 03 சீருடை வகைகளைப் புதிதாகத் தைத்தல் நிறுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பில் பொருத்தமான நடவடிக்கை எடுப்பதற்காகப் பரிந்துரைகளைப் பெற்றுக் கொள்வதற்கு கடற்படை உள்ளகப் பணிப்பாளர் சபை ஒன்றினை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அரச நிதி அத்தியாவசியப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக மட்டும் சிக்கனமாகப் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதும் மற்றும் இருக்கும் துணிகளை உற்பத்தித் திறனான நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படுதல் வேண்டும். |
| (இ) | மத்திய சீருடை களஞ்சியசாலைக்குப் புதிய பதவியணியினர் இணைக்கப்பட்டதன் பின்னர் 2023 ஒக்டோபர் 31 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டிருந்த களஞ்சிய சாலை இருப்புக் கணிப்பீட்டு அறிக்கைக்கு அமைய 269 இருப்பு உருப்படிகளில் 9401 அலகு | மத்திய சீருடை களஞ்சியசாலையில் இருப்பு உருப்படிகளில் மிகை மற்றும் குறைவு காணப்படுதல் தொடர்பில் முறையான விசாரணை தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | விரைவில் பரீட்சிப்பு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இருப்புக்கள் மிகையைகவும், 227 இருப்பு உருப்படிகளில் 8635 அலகு இருப்புக்கள் குறைவாகவும் காணப்பட்டதுடன் அது தொடர்பிலான விசாரணை நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | வெளித் தரப்பினர்களுக்கு வழங்கப்பட்ட சேவைகளுக்காக ஈட்டப்பட்ட வருமானத்தில் ஒன்றிணைந்த நிதிக்கு வரவு வைப்பதற்கு மீதியாக இருந்த ரூபா. 337.5 மில்லியனில் ஒன்றிணைந்த நிதியத்திற்கு வரவு வைப்பதற்கு இணங்கி இருந்த 40 சதவீத அளவான ரூபா. 135 மில்லியன் மீளாய்வாண்டு இறுதி வரையில் ஒன்றிணைந்த நிதியத்தில் வரவு வைக்கப்பட்டிருக்கவில்லை. | 2016 ஆம் ஆண்டில் கடற்படை பணிப்பாளர் நாயகத்தின் பயிற்சி அலகின் கீழ் வெளிநாட்டுப் பயிற்சி பாடநெறியில் பங்கு பற்றிய கடற்படை வீரர்களின் தேவைப்பாட்டுக்காக மீள் நிரப்பல் அடிப்படையில் கடற்படை தலைமை அதிபதியின் அனுமதியின் பிரகாரம் ரூபா. 147.4 மில்லியன் தொகை வழங்கப்பட்டிருந்ததுடன், அந்தத் தொகை மீள் நிரப்பல் செய்யப்பட்டதன் பின்னர் ஒன்றிணைந்த நிதியத்திற்கு வரவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்துக் கொள்கின்றேன். | அரச கணக்கீட்டு செயற்குழுவின் கட்டளையின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (உ) | கடற்படையின் நவிரு சவிய நலனோம்பல் நிதியமானது நிறுவன சட்டங்களுக்கு இணங்குகின்றதா என்பது தொடர்பில் நிதி அமைச்சின் அனுமதியினைப் பெற்றுக் கொள்வதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இலங்கை கடற்படையினுள் முறையான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைக்கு உட்பட்டு (இகப கட்டளை 0826 மற்றும் நவிரு சவிய சட்டத்திற்கு அமைய ) தற்போது சேவையில் உள்ள கடற்படை வீரர்கள் மற்றும் சட்ட ரீதியாக கடற் படையிலிருந்து ஓய்வு பெற்றுச் சென்றுள்ள கடற்படை வீரர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களின் நலனோம்பலை உயர்த்துவதை நோக்காகக் கொண்டு தற்போது கடற் படையினுள் கடற்படை வீரர்களுக்கு வழங்கப்படும் மருத்துவ வசதிகளுக்கு மேலதிகமாக சுகாதார | அரச கணக்கீட்டு செயற்குழுவின் கட்டளையின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | நிதியினை வழங்குவதை நோக்காகக் கொண்டு ‘‘நவிய சவிய கடற்படை சுவசஹன நிதியம்’’ எனும் பெயரில் இந்த நலனோம்பல் நிதியம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | |
| (ஊ) | கடற்படையின் மூலம் பேணப்பட்டு வரும் அனைத்து வருமானம் ஈட்டும் வணிக நடவடிக்கைகள் தொடர்பில் பொதுத் திறைசேரியுடன் கலந்துரையாடப்பட்டு காணப்படும் நிதிப் பிரமாணங்களுக்கு அமைய செயல்படுவது தொடர்பில் பொதுத் திறைசேரியின் அனுமதியினைப் பெற்றுக் கொண்டு அதன் அறிக்கை அரச கணக்கீட்டு செயற்குழுவிற்கு மீளாய்வாண்டு இறுதி வரையிலும் அனுப்பப்பட்டிருக்கவில்லை. | கடற்படை மாலிமா உபசரணை சேவைகள், மாலிமா என்டர்பிரைசஸ், எரிபொருள் நிரப்பு நிலையங்கள், திமிங்கிலம் பார்வையிடல் செயல் திட்டம், விவசாய செயற்திட்டம், ஓய்வு விடுதிகள் போன்ற வருமானம் ஈட்டும் வணிக நடவடிக்கைகள் தொடர்பில் 2024 மே மாதம் 14 ஆம் திகதி நிதி அமைச்சில் இடம்பெற்ற கூட்டத்தின் தீர்மானத்திற்கு அமைய பாதுகாப்பு அமைச்சின் மூலம் வழங்கப்பட்ட அறிவுரையின் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. | அரச கணக்கீட்டு செயற்குழுவின் கட்டளையின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (எ) | கடற்படையினால் நடாத்தப்பட்டு வரும் வணிகங்கள் அந்த வணிகங்களில் ஈடுபடுத்தப்பட்டுள்ள ஆரம்ப மூலதனத் தொகை, வருமானம், செலவு, வரவு அல்லது நட்டம் தொடர்பான அறிக்கை என்பவற்றை அரச கணக்கீட்டு செயற்குழுவிற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட எடுக்கவில்லை. | நலனோம்பல் செயற்திட்டங்கள் அரச சார்பற்ற நிதியங்கள் மூலம் ஆரம்ப மூலதனம் பெற்றுக் கொள்ளப்பட்டு நிறுவப்பட்டு கடற்படை சேவையில் ஈடுபட்டுள்ள கடற்படை வீரர்கள், ஓய்வு பெற்ற கடற்படை வீரர்கள், யுத்தத்தில் மரணமடைந்த, ஊனமுற்ற மற்றும் காணாமல் போன கடற்படை வீரர்களின் மற்றும் அவர்களது நெருங்கிய உறவினர்களின் நலனோம்பலை நோக்காகக் கொண்டு பேணப்பட்டு வருவதுடன், முழுமையாக இலாபம் ஈட்டும் நோக்கத்தினைக் கொண்டிருக்காது பேணப்பட்டு வரும் நலனோம்பல் செயற்திட்டங்கள் ஆகும். | அரச கணக்கீட்டு செயற்குழுவின் கட்டளையின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | மருந்து இருப்பினை பயன்படுத்தும் முறைமை தொடர்பாக முறையான ஆய்வின்றி 2023 ஆம் ஆண்டில் ரூபா. 4,073,197 மொத்த செலவில் மருந்துகள் மற்றும் சத்திர சிகிச்சை உபகரணத் தொகைகள் 123 சந்தர்ப்பங்களில் சில்லறைக் காசு கட்டுப்பணத்தின் மூலம் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் இந்த உருப்படிகள் ஒன்றிணைந்த விநியோகம் மற்றும் சேவைகள் முகாமைத்துவ ஒழுங்கமைப்பினுள் (ILMS) உள்ளடக்கும் நடவடிக்கை நிறைவு செய்யப்பட்டு இருக்கவில்லை. | சில்லறைக் காசு கட்டுப் பணத்தின் மூலம் பெற்றுக் கொள்ளப்படும் மருந்துகளை ஒன்றிணைந்த விநியோகம் மற்றும் சேவை முகாமைத்துவ ஒழுங்கமைப்பினுள் உள்ளடக்கப்பட்டு மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தேவையான அடிப்படை வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்கான முறையான அனுமதியினை ஒன்றிணைந்த விநியோகம் மற்றும் சேவை முகாமைத்துவ ஒழுங்கமைப்பின் பணிப்பாளரிடம் இருந்து கிடைத்ததன் பின்னர் சில்லறைக் காசு கட்டுப்பணத்தின் மூலம் பெற்றுக் கொள்ளப்படும் மருந்துகளை ஒன்றிணைந்த விநியோகம் மற்றும் சேவை முகாமைத்துவ ஒழுங்கமைப்பின் ஊடாக மேற்கொள்ளுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | மருந்து பெறுகை நடவடிக்கைகளின் போது தேவைப்பாடுகள் சரியாக இனம் காணப்பட்டு மேற்கொள்ளப்படுதல் வேண்டும் மற்றும் சில்லறைக் காசு கட்டுப்பணத்தில் இருந்து செய்யப்படும் கொள்வனவும் ILMS ஒழுங்கமைப்பினுள் உள்ளடக்கப்படுதல் வேண்டும். |
| (ஐ) | அரச மருத்துவ விநியோகப் பிரிவிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ரூபா. 1,860,619 மொத்த செலவிலான 49 வகையான மருந்துகள் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் தொடர்ந்தும் பாவனையை நிறுத்துமாறு மருத்துவ விநியோகப் பிரிவின் மூலம் வழங்கப்பட்ட அறிவுரையின் காரணமாக மத்திய மருந்து களஞ்சிய சாலையில் மீளாய்வாண்டு இறுதி வரையிலும் காணப்பட்டன. | அவ்வாறு அறிவுரை வழங்கப்பட்ட அந்த மருந்துகளில் ஒரு சில மருந்துகள் தற்போது காலாவதியாகி உள்ளன. அந்த உருப்படிகளுக்குப் பதிலாகப் புதிய மருந்துகளைப் பெற்றுக் கொள்ளுதல் அல்லது அதன் பெறுமதிக்குப் பதிலாக வேறு மருந்துகளை வழங்குமாறு அவ்வப்போது கடிதம் மூலம் மருத்துவ விநியோக பிரிவிற்குத் தெரிவித்த போதிலும் தீர்மானமான பதில் இதுவரையிலும் வழங்கப்படவில்லை. மருத்துவ விநியோகப் பிரிவின் மூலம் வழங்கப்படும் பதிலின் பிரகாரம் எதிர்கால நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. | மொத்த செலவினை அறவிடுவதற்கு அல்லது அந்த மருந்துகளுக்கு மாற்று மருந்துகளைப் பெற்றுக் கொள்வதற்குப் பொருத்தமான வேலைத் திட்டமொன்று ஏற்படுத்தப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஒ) | மருந்து உருப்படிகளின் மீதி எதிர்மறை பெறுமதியை காட்டுதல், மெதுவாக விநியோகிக்கப்படும் மருந்து உருப்படிகள் அரச வைத்தியசாலைகளுக்கிடையே பரிமாறிக் கொள்ளுவதற்கான வசதிகள் இல்லாமை, வெலிசரை வைத்தியசாலை ஒழுங்கு அமைப்பில் Sever இயந்திரத்தின் இணைப்புகள் அவ்வப்போது செயலிழத்தல் போன்ற பலவீனங்கள் ஒன்றிணைந்த விநியோகம் மற்றும் சேவை முகாமைத்துவ ஒழுங்கமைப்பில் காணப்பட்டன. | மருந்து உருப்படிகள் அரச வைத்தியசாலைகளுக்கிடையே அல்லது வேறு வெளித் தரப்பினரிடையே பரிமாறிக் கொள்ளுதல் தொடர்பில் ஒன்றிணைந்த விநியோக சேவை முகாமைத்துவ ஒழுங்கமைப்பில் வசதிகள் ஏற்படுத்தப்பட்டு ஒழுங்கமைப்பினை இற்றைப் படுத்தித் தருமாறு தற்போது வரையில் கோரிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்காதுடன் Server இனுள் ஏற்பட்ட செயலிழப்பு தொடர்பில் எது வித அறிவிப்பும் வெலிசரை கடற்படை வைத்தியசாலையால் இதுவரையில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. நீண்ட கால ரீதியில் குறித்த விடயங்கள் விநியோகித்தல் மற்றும் களஞ்சியப்படுத்துதல் என்பன ஒழுங்கமைப்பின் மூலம் சரியாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டதுடன், எதிர்மறை பெறுமதியினை ஒழுங்கு அமைப்பினுள் காட்டுவதற்கு அது காரணமாக உள்ளது. தற்போது காணப்படும் பௌதீக இருப்பு நிலைமை மற்றும் ஒழுங்கு அமைப்பினுள் காணப்படும் இருப்பு நிலைமை என்பவற்றை இற்றைப்படுத்திக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க முடியும் என்பது தெரிவிக்கப்படுகின்றது. | குறித்த பிரிவின் மூலம் இந்தச் சிக்கல்களுக்கு முறையான வழிவகைகள் எடுக்கப்படுதல் வேண்டும். |

## 4. மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 ஆம் ஆண்டு தொடக்கம் 2023 ஆம் ஆண்டு வரையான 05 ஆண்டு காலப் பகுதியினுள் உத்தியோகத்தர்கள் 537 பேர் மற்றும் 9,011 பேர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட போது ஓய்வு பெற்றுச் சென்ற மற்றும் சேவையைக் கைவிட்டுச் சென்ற எண்ணிக்கை முறையே 580 உத்தியோகத்தர்கள் மற்றும் 17,734 கடற்படை வீரர்கள் ஆவர். அதற்கு அமைய கடற்படையில் இருந்து வெளியேறிச் செல்லும் எண்ணிக்கையுடன் ஒப்பிடும் போது ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட எண்ணிக்கை 52 சதவீதத்திலும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | பாரிய எண்ணிக்கையானோர் குறுகிய காலத்தினுள் சேவையிலிருந்து ஓய்வு பெற்றுச் சென்றமை எதிர்கால சேவைக் காலத்திற்காக மீண்டும் சேவையைப் பெற்றுக் கொள்வதற்கு விருப்பமின்மையை தெரிவித்திருந்தமை, அங்கீகரிக்கப்பட்ட சேவைக் காலத்திற்கு முன்னரே வேறு தொழிலில் ஈடுபட்டமை / வெளிநாட்டுக்குச் சென்றமை போன்ற நடவடிக்கைகளுக்காக சேவையிலிருந்து நிரந்தரமாக விலகியமை அல்லது சேவையைக் கைவிட்டுச் சென்றமை, 2019 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரையில் நாட்டில் நிலவிய கொவிட் 19 தொற்றுநோய் நிலைமைக்கு முகம் கொடுத்தமையால் புதிய ஆட்சிசேர்ப்பு வீழ்ச்சி அடைந்தமை, 2022 ஆம் ஆண்டில் அரசாங்கத்தினால் அரச நிறுவனங்களுக்கான புதிய ஆட்சேர்ப்பினை இடை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தமை போன்ற காரணங்கள் தாக்கத்தை ஏற்படுத்தி இருந்தன.<br><br>ஆட்சேர்ப்பு செய்தலை அதிகரிப்பதற்காக கடற்படை இணைய தளத்தின் ஊடாக போன்றே சமூக வலைத் தளங்களின் ஊடாக மக்களைத் தெளிவுபடுத்தும் வேலை திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் மற்றும் பிரதேச அலுவலகங்கள், பாடசாலைகள் மூலம் கடற்படை சேவையில் உள்ள | சேவையினைக் கைவிட்டுச் செல்லுவதை குறைப்பதற்குப் பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும் மற்றும் ஆட்சேர்ப்பு செய்தலைத் துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | முக்கியத்துவம் தொடர்பில் தெளிவுபடுத்தும் வேலை திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | உடற்பயிற்சி, சட்டம், தகவல் தொழில்நுட்பம், இசை, பொறியியல், சிவில் பொறியியல், நாளாந்த கடற் சேவை, விசேட முறைமையின் கீழ் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட கடற்படை வீரர் போன்று பிரிவுகளில் 2012 ஆம் ஆண்டு தொடக்கம் 2024 ஜனவரி வரையிலான காலப் பகுதியினுள் ஏற்பட்டிருந்த பொறியியல் தொழில் உத்தியோகத்தர்கள் 68 பேர், நிர்மாணம் மற்றும் கைத்தொழில் துறைகளுக்கு உரிய கடற்படை வீரர்கள் 3,896 பேர் உள்ளிட்ட விசேட திறமைகளைக் கொண்ட 90 உத்தியோகத்தர்கள் மற்றும் 4,103 கடற்படை வீரர்களுக்கான வெற்றிடம் நீண்ட காலம் தொட்டு காணப்படுகின்றது. | வருடாந்தம் கடற் படையில் ஏனைய பாதுகாப்பு மற்றும் நிர்வாக நடவடிக்கைகளுக்காக மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட கடற்படை வீரர்களின் எண்ணிக்கையினையே ஆட்சேர்ப்பு செய்வதற்கு அரசாங்கத்தினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளமை ஒரே தடவையில் பாரிய எண்ணிக்கையானோரை ஆட்சேர்ப்பு செய்வதன் மூலம் பயிற்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளும் போது வசதிகள் போதிய அளவில் இல்லாமை மற்றும் அதற்குக் கவனத்தில் கொள்ளத்தக்க காலம் தேவைப்படுகின்றமை போன்ற விடயங்கள் காணப்பட்டதன் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கு அனுமதி வழங்கப்படும் எண்ணிக்கையில் சதவீதமாக ஒவ்வொரு பிரிவிற்கும் ஆட்சேர்ப்பு செய்வதன் மூலம் இந்த நிலைமையைத் தவிர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பதவியணிக்கான தேவைப்பாடுகள் காலத்திற்கு காலம் மற்றும் சரியாக இனம் காணப்பட்டு வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும் அல்லது அவசியமில்லை எனில் அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையினைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (இ) | வெலிசரை கடற்படை வைத்திய சாலையில் 2020 ஆம் ஆண்டு தொடக்கம் 2023 ஜூன் மாதம் வரையான காலப் பகுதியினுள் வருடாந்தம் தங்கி இருக்கும் மற்றும் வெளிவாரியாகச் சிகிச்சை பெற்ற நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்திருந்த போதிலும் வைத்தியசாலை பதவியணியினர் 365 இல் இருந்து 286 வரையில் குறைவடைந்து இருந்ததனால் வைத்தியசாலையில் கடமைகளை நிறைவேற்றும் போது பதவியணியினர் மிகவும் சிரமங்களுக்கு உட்பட்டிருந்தனர். | நிலவும் பொருளாதார சிரமங்களை எதிர் நோக்கி ஓய்வு வழங்கப்படும் / ஊனமுற்ற கடற்படை வீரர்கள் மற்றும் அவர்களது உறவினர்கள் பாரிய எண்ணிக்கையானோர் வெலிசரை கடற்படை வைத்தியசாலைக்கு மருத்துவ சிகிச்சை பெற்றுக் கொள்வதற்கு வருகை தருதல் மற்றும் யுத்த சூழல் காரணமாக மருத்துவ பிரிவிற்கு ஒவ்வொரு ஆட்சேர்ப்பின் கீழும் பாரியளவிலான கடற்படை வீரர் | வைத்தியசாலை நடவடிக்கைகளை வினைத்திறனுடன் பேணிச் செல்லுவதற்குத் தேவையான பதவியணியினரை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | தொகை ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்ததுடன், அவர்களது அங்கீகரிக்கப்பட்ட ஆரம்ப சேவைக் காலம் / 22 வருட சேவைக் காலம் நிறைவடைந்தமை போன்ற விடயங்கள் தாக்கத்தினை ஏற்படுத்தி உள்ளன. இந்த நிலைமையை சமநிலைப்படுத்துவதற்கு எதிர்காலத்தில் மருத்துவ சிகிச்சைப் பிரிவிற்கு புதிய ஆட்சேர்ப்பு செய்தல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | |
| (ஈ) | கடற்படையின் ஊழியர் எண்ணிக்கையை எதிர்காலத்தில் குறைக்கும் பிரேரணையைக் கவனத்தில் கொள்ளும்போது கடற்படையின் கடமைப் பொறுப்புக்களை வினைத்திறனாக மற்றும் உற்பத்தித் திறனாக நிறைவேற்றுவதற்கு இருக்க வேண்டிய எண்ணிக்கை தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட மூலோபாய ஆய்வு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | இலங்கை கடற்படையின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 55,000 ஆக இருந்த போதிலும், 2019 ஓகஸ்ட் மாதம் 23 ஆம் திகதி தொடக்கம் அதிகபட்சமாக 53,000 இற்கு உட்பட்டு பேணிச் செல்லுமாறு பாதுகாப்பு அமைச்சினால் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறு இருந்த போதிலும், கடற்படையில் 2030 மற்றும் அதற்கு அப்பால் உள்ள மூலோபாய திட்டத்திற்கு அமைய மொத்த ஊழியர் எண்ணிக்கையை 40,000 வரையில் குறைப்பதற்கு மற்றும் கடற்படை அணியினை மீள் கட்டமைப்பு செய்வதற்கு பிரேரணை செய்யப்பட்டுள்ளது. அதற்கமைய கடற்படை தலைமை அதிபதியினால் இது தொடர்பில் மேலதிக ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அறிக்கையினைச் சமர்ப்பிப்பதற்காக ஆய்வு சபை ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன், அதன் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | கடற்படையினை வினைத்திறனுடன் பேணிச் செல்வதற்காக எதிர்காலத்தில் தேவையான பதவியணித் தொகை சரியாகவும் மற்றும் விரைவாகவும் இனம் காணப்படுதல் வேண்டும். |